முருகப்பெருமான் துணை

**மகான் பரமானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

06.10.2021, புதன்கிழமை

1. அவதாரம் கலிவெல்லப்பிறந்த
ஆறுமுக அரங்க மகானே
புவனம் உன் தருமத்தை
பூசையை பாதுகாப்பென வரவேற்க
2. ஏற்கவே மாற்றம் பெறும் என
இயம்பியே துல்லிய ஆசிதனை
ஆற்றல்பட பிலவ தரிவை திங்கள்
அய்நான்கு திகதி கணக்கன் வாரம்
(பிலவ வருடம் புரட்டாசி மாதம் 20ம் நாள், 06.10.2021 புதன்கிழமை)
3. வாரமதில் பரமானந்தர் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரம் போக்கி மக்களை மீட்க
சுத்தநெறி காட்டி அருளுகின்ற
4. அருளுகின்ற சன்மார்க்கமெனும்
அழியாமை தரும் நெறியை
அருளும் அரங்கனின் வரமாக
அகிலத்தார் ஏற்றுத் தொடர
5. தொடரவே மக்களுக்கு மனபலம்
தூய்மையான செயல்கள் பெருகி
இடரை வெல்லும் மக்களாக
ஏழ்மை விரட்டும் சக்திகளாக
6. ஆகவே உலகமக்கள் மாறி
அரங்க ஞானி தேர்வு செய்யும்
யுகத்தின் ஞானவான்களாக
உயர் ஞானிகளாகவே ஆவர்
7. அவனியில் இந்த மாற்றம்
அன்னதான சேவை கொண்டு
அவதாரமதில் பிரதானமாகவே
அரங்கனும் அற்புதம் நிகழ்த்தி வர
8. வருகவே நடந்துவரும் ஆளுமை
வணங்கி குருவே என
முருகப் பெருமான் வழிபாட்டை
முழுமைதரும் மார்க்கமாக ஏற்று

9. ஏற்றுமே நல்லாட்சி நடத்திட
இறங்கி அருளுங்கள் என
உற்றதொரு வேண்டி வருக
உயர்வான தரும வழிமுறையை

10. முறையாக ஏற்றுத் தொடர
மொழிகுவேன் தரும சிந்தை பெருகி
நிறைவான ஞான ஆட்சியாக
நிலவுலகம் மாற்றம் காணும்

11. காணவே அரங்க ஞானியே
கந்த வேலன் மகா அவதாரம்
ஞானயுகம் படைக்கவந்த தவசி
நம்பிமக்கள் வர மாற்றம் காணும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–